Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Issue - 2, May 2023 E-ISSN: 2583-0481

# A Multi Perspective Study of Situation in *Tirukkural*

**Dr. R. Seetha,** Associate Professor, St. Philomena's College, Mysore - 570 015, India.
ORCiD: https://orcid.org/0009-0002-0346-9595
**DOI: 10.5281/zenodo.7981630**
**Received** 10 March 2023; **Revised form** 09 April 2023; **Accepted** 21 April 2023; **Available online** 26 May 2023.

## Abstract

*"Tirukkural" is the universal language of the world. Thirukkural has been revered till today because of its moral insights. Many scholars have taken and translated its ideas from various angles and presented in a most wonderful way. However, every time I read Kural, it keeps giving me new meanings and ideas as if they were out of date. That is why Kural has the honour of conquering time. There are two chapters that appear on the topic of estimating the situation and doing action. In the nature of cognition, being aware of another's psychological state is important to external life and a necessary one too. But when it comes to inner life, it can be assumed that surrender or tolerance becomes very necessary. Understanding the situation is something that takes place in the internal life as well as the external life. What is its nature? What does it mean? Valluvar has explained very clearly how we should level within it. In short, we are looking at two different positions on the same topic. That means the title is of single idea and the Kuratpas are different. Character is different. The meaning is different. This article seeks to explore its meaning, place, and specialty of Kurals in its multifaceted nature.*

**Keywords:** *Tirukkural*, Introspection, Identification, Multidimensional Perspective.

## References

[1] Madurai Ilangumaranar. *Thirukkural*. Varthamanan Publishing House, Chennai, 1999.
[2] V. Munusamy (Thirukkuralar). *Tirukkural – Athikara Vilakkam*. Vanathi Publishing House, Chennai, 2008.
[3] Srinivasan, Ti. Chandrika Rajamohan. *Naladiyar.*Shanta Publishers, Chennai, 1991
[4] Chokkalingam, Su. N. *Mudurai- Avvaiyar Padalgal*. Vanathi Publishing House, Chennai, 1994.
[5] Duraichami Pillai, Su, (Auvai). *Purananooru*. Tirunelveli South Indian Saiva Siddhanta Publishing House, Tirunelveli, 1976.
[6] Ramasubramaniam. *Purananooru*. Thirumal Nilayam, Chennai, 2000.
[7] *Sivaka Chintamani*. Saiva Siddhanta Publishing House, Tirunelveli, 1992.
[8] Vinayakamurthy, A, *Thirukkural Kattum Meippattu Sindanaigal*. Vanpugal. Subramanya Bharatiyar Tamiliyapulam, Puducherry University, Puducherry. Vanavil Cultural Centre, Chennai, 2011.
[10] Caroline Jebasandini, *Kural Koorum Natpuch Sindanaigal*. Tamilil Ara Ilakiyangal, Kalluri Asiriyar Kumari Tamil Sangam, Nagercoil, 2011.
[11] Kamala Murugan. *Kural Kattum Kuripariyum Kalai*. (pp. 2-2) Ibid.
[12] Ilangumaranar, Pulavar. Kalithogai, Varthaman Publishing House, Chennai -1999

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# திருக்குறளின் குறிப்பறிதல் – பன்முக நோக்கு

**முனைவர் இரா. சீதா,** இணைப்பேராசிரியர், புனித பிலோமினாள் கல்லூரி, மைசூரு - 570 015, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-0346-9595
DOI: 10.5281/zenodo.7981630

**ஆய்வுச்சுருக்கம்**

*திருக்குறள் உலகப் பொதுமொழி. திருக்குறளுக்குதான் இன்று வரை எத்தனை எத்தனை அறிஞர்கள் பற்பல கோணங்களில் தத்தம் கருத்துகளை மிகப் பிரமாதமாக எடுத்து மொழிந்திருக்கிறார்கள். இருந்தாலும் ஒவ்வொரு முறையும் குறளைப் படிக்கும்போது அது புது புது அர்த்தங்களை, விஷயங்களை காலத்திற்கேற்றாற் போல அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் குறள் காலத்தை வென்றது என்ற பெருமையை கொண்டிருக்கிறது. குறிப்பறிதல் என்ற தலைப்பில் இரு அதிகாரங்கள் தென்படுகின்றன. குறிப்பறிதல் என்ற தன்மையைப் பார்க்கும்போது, மற்றவரின் மன உணர்வினை அறிந்துக் கொள்வது புற வாழ்க்கைக்கு முக்கியம்; அவசியமும் கூட. ஆனால் அக வாழ்க்கை என்று அமையும் போது, விட்டுக் கொடுத்தல் அல்லது பொறுத்துக் கொள்ளுதல் என்பது அவசியமாகிறது என்று கொள்ளலாம். குறிப்பறிதல் என்பது அக மற்றும் புற வாழ்க்கையிலும் இடம் பெறுகின்ற ஒன்று. அதன் தன்மை, மற்றும் பொருள் என்ன? அதற்குள் நாம் எவ்வாறு பயணிக்க வேண்டும் என்று வள்ளுவர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இக்கட்டுரை அதன் பொருள், இடம், மற்றும் அக்குறட்பாக்களின் சிறப்பு போன்றவற்றை பன்முகத் தன்மையில் ஆராய முற்படுகிறது.*

**திறவுச்சொற்கள்:** திருக்குறள், குறிப்பறிதல், பன்முக நோக்கு.

**முன்னுரை**

திருக்குறளுக்குதான் இன்று வரை எத்தனை எத்தனை அறிஞர்கள் பற்பல கோணங்களில் தத்தம் கருத்துகளை மிகப் பிரமாதமாக எடுத்து மொழிந்திருக்கிறார்கள். இருந்தாலும் ஒவ்வொரு முறையும் குறளைப் படிக்கும்போது அது புது புது அர்த்தங்களை, விஷயங்களை காலத்திற்கேற்றாற் போல அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் குறள் காலத்தை வென்றது என்ற பெருமையை கொண்டிருக்கிறது. குறிப்பறிதல் என்ற தலைப்பில் இரு அதிகாரங்கள் தென்படுகின்றன. கூறியது கூறல் குற்றமல்லவா? குறள் அப்படி செய்யுமா? பொருட்பாலிலும், காமத்துப்பாலிலும் ஒரே தலைப்பில் குறட்பாக்கள் தென்படுகின்றன. குறிப்பறிதல் என்பது இன்றைய காலக் கட்டத்தில் 'செமியாட்டிக்ஸ்' – Semiotics என்ற தலைப்பில் பேசப்படுகிறது. இதை ஐரோப்பிய அறிஞர் Fedinand de Saussure மிக விரிவாக விளக்கியுள்ளார் என்று அனைவரும் பாராட்டிப் பேசுவர். ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வள்ளுவர் இதைக் குறித்து தம் நூலில் மிக அழகாக

விளக்கியுள்ளார். சொல்லப்போனால் குறிப்பறிதல் என்பது அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் இடம் பெறுகின்ற ஒன்று. அதன் தன்மை என்ன? அதன் பொருள் யாது? அதற்குள் நாம் எவ்வாறு பயணிக்க வேண்டும் என்பதைப் பற்றி வள்ளுவர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். சுருக்கமாகச் சொன்னால் நாம் ஒரே தலைப்பில் இரு வேறு நிலைகளைக் காண இருக்கிறோம். அதாவது தலைப்பு ஒன்று, குறட்பாக்கள் வேறு. தன்மை வேறு. பொருள் வேறு. இக்கட்டுரை அதன் பொருள், இடம், மற்றும் அக்குறட்பாக்களின் சிறப்பு போன்றவற்றை பன்முகத் தன்மையில் ஆராய முற்படுகிறது.

**குறிப்பறிதல் என்றால் என்ன? ஒருவரது மனஓட்டத்தை அவர் கூறாமலே – அதாவது வாய்ச்சொற்களின்றி அவரது செய்கைகள் மூலம், அவரது முக அசைவுகளைக் கொண்டே பொருள் உணர்வதாம்.** இது எப்படி சாத்தியம்? எதையும் மற்றவர் உரைக்காமல் இருக்க, தானே அவர் மனக்கருத்தை அறியக் கூடியவன் எப்படிபட்டவன்? **குறிப்பறிதல் என்ற தலைப்பில் ஒன்று பொருட்பாலில் இடம் பெறுகின்றது. அதில்** பத்து குறட்பாக்கள் இருக்கின்றன அவற்றை இரு தலைப்புகளில் அல்லது இரு கூறுகளில் அடக்கலாம். (அதிகாரம் எ.க.)

*** முதல் கூறு /தன்மை : மற்றவர் மனக் கருத்தை உணருபவனின் தன்மை, பயன்**

1. மற்றவரின் மனக் கருத்தை உணர்பவன் →வற்றாத நீர் சூழ்ந்த உலகிற்கு அணிகலனைப் போன்றவன்,
2. தெய்வத்திற்குச் சமமானவன் (மெய்யுணர்வு உடைய முனிவனுக்கு சமமானவன் என்பார் மதுரை இளங்குமரனார்).
3. அவனை எப்பாடு பட்டாவது நம் துணையாகக் கொள்ளவேண்டும்.
4. அவன் சாதாரண மனிதனைக் காட்டிலும் வேறுபட்டவன்,
5. அப்படிப்பட்டவனின் துணை ஒருவனுக்கு வாழ்க்கையில் நல்ல தெளிவையுண்டாக்கும்.

*** இரண்டாம் கூறு / தன்மை : கண் மற்றும் முகத்தின் தன்மை, பயன்**

1. பிறர் மனக்கருத்தை ஒருவனால் அறிய முடியவில்லையென்றால், கண் இருந்து பயனென்ன?
2. முகம் பளிங்குபோல் ஒருவனின் மனக் கருத்தை எடுத்துரைக்கும்.
3. முகம்தான் பேரறிவு உடையது (காரணம் உள்ளக்கருத்தை முகத்தால் மறைக்க முடியாது. முயன்றாலும் தோற்பர்.
4. மேலும், கண்களே ஒருவனது பகை உணர்வைக் காட்டிவிடும். எல்லாவற்றையும் உணர்த்துவது கண்தான்.

இதிலிருந்து பெறக்கூடியது என்னவென்றால், பிறர் மனக்கருத்தை அறிய வல்லவன் மிகச் சிறந்தவன் ஆவான். அவ்வாறு அவன் அறிவதற்குத் துணை செய்பவை அயலாரின்

கண்கள்தான். இந்த இரண்டு கருத்துகள்தான் பத்து குறட்பாக்களின் கருத்து.. இந்த இரண்டு கருத்திற்கு பத்து குறட்பாக்களா என்று ஆச்சரியப்பட வைக்கும். ஆனால் உண்மையென்ன?

ஒருவனின் மனக்கருத்தை அறிவது என்பது மிகக் கடினம். அத்திறமை கொண்டவனை எதைக் கொடுத்தாவது துணையாகக் கொள்வது நலம் என்கிறார் வள்ளுவர். இது ஒரு நாட்டு மன்னனுக்கு முதல் ஒரு வீட்டுத் தலைவனாக இருக்கும் அனைவருக்கும் பொருந்தும். பகைவனது உள்ளச் சூழ்ச்சியை எப்படி அறிய முடியும்? அவன் கண்கள் காட்டிக் கொடுத்து விடும். 'பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் என்கிறார் வள்ளுவர்.

**பகைமையை எப்படி கண்கள் உணர்த்தும்? செறாஅச் சிறு சொல்லும் 'செற்றார் போல் நோக்கும்' (குறிப்பறிதல்- 110 காமத்துப்பால் – -1097)**

கண்கள் பரந்து விரிதல், உதட்டில் புன்னகை, முகத்தின் ஒளி - இவை மகிழ்ச்சியின் அடையாளம், புருவத்தைச் சுருக்கி, கண்கள் சிறுத்துப் போகுதல் சினத்தின் அடையாளம். அதன் காரணமாக வார்த்தைகள் தடித்துப் போகும். மேலும், கோபத்தில் வார்த்தைகள் மரியாதை குறைந்து, தொனி கூடி, சிறு சிறு தொடர்களாகவும் அமையும்.

கேண்மையை கண் உரைக்கும்! ஆம்!

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும். (அதி.- 8 அன்புடைமை -71)**

என்ற குறள் மிக அழகாக விளக்குகிறது. இதை பார்க்கும்போது ஒருவனுக்கு அதுவும் மன்னனுக்கு குறிப்பறிதல் மிகவும் முக்கியம் என்பதை பெற முடிகிறது.

அவ்வையாரும் குறிப்பின் தன்மை பற்றி கூறும் போது,

**கவையாகி கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள்- சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம். (ஔவை –மூதுரை- 13)**

கல்வி அறிவு அற்றவனும் ஒருவருடைய குறிப்பை அறியாதவனும் நல்ல மரம் என்கிறார். அப்படியென்றால் கல்வி மிக முக்கியம் என்றாகிறது. கல்வியைக் காட்டிலும் மிகச் சிறந்தது கேள்விச் செல்வம். இவ்விரண்டு மட்டும் இருந்தால் போதாது. காரணம் என்ன? ஒரு செயலைச் செய்ய புகுமிடத்து '

**நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்**
**பண்பறி தாற்றாக் கடை. (அதி-47, தெரிந்து செயல் வகை, குறள் - 469)**

அப்படியென்றால், கல்வி, கேள்வி மட்டுமல்லாது, ஒருவனுடைய பண்பையும் உணரும் திறமை வேண்டும். அது குறிப்பினால் மட்டுமே சாத்தியம். அப்படியானால் பண்பை எப்படி உணர முடியும்? நாலடியாரில் இதற்கு தெளிவு கிடைக்கிறது.

**என்பாய் உகினும் இயல்பிலார் பின் சென்று**
**தம்பாடு உரையாரோ தம்முடையார் – தம்பாடு**
**உரையாமை முன்னுணரும் ஒண்மையுடையாருக்கு**

**உரையாரோ தாமுற்ற நோய். (நாலடியார்-மானம்)**

மனித தன்மை அற்றவர் முன் ஒருவன் தம் குறைகளை எடுத்துச் சொல்லக்கூடாது. அது அவன் தன்மானத்தை இழந்ததற்குச் சமம். நாம் நம் குறைகளைக் கூறும் முன்பே நம் மனக் குறிப்பை உணர்கின்றவனிடத்தில் போய் ஒருவன் சொல்லாமல் இருக்கக் கூடாது. அவன்தான் நம் துயரை போக்கும் திறம் கொண்டவன். மனிதக் கூட்டத்தில் அப்படிபட்டவனை எப்படி உணர்வது?

**அழிவின் அவை நீக்கி ஆறுய்த் தழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு. (அதி-நட்பு- 79 குறள் 787)**

நம் செயல்களில் சில நேரங்களில் தவறு எற்படலாம். நல்ல குறிப்புடையவன் நம்முடன் பயணிப்பான். நம்மை நல்வழியில் செலுத்துவான். நாம் துன்புறும்போது அவனும் துன்பம் அடைவான் என்கிறது. ஆகையால் அப்படிபட்டவனை நம்முடைய உயிராகக் கொள்ளுதல்தான் முதற்கடமையாகிறது. இக்குறளை ஒருவன் தம் வாழ்நாள் முழுவதும் பலமுறை போற்றி போற்றி உணர வேண்டும். உண்மையான அன்புடையவன், பண்புடையவன், நமக்கு கேடு வந்த போது, அதை விலக்கி, நம்மை நல்ல வழியில் செலுத்துவான். நாம் நம் கெட்ட காலத்திலிருந்து மீண்டு வரும் வரை நாம் படும் துயரமெல்லாம் அவனும் அத்துயரை அடைவான் என்பதாம். அதனால்தான் நம் மனக் குறிப்பை உணர்கின்றவனை தெய்வத்துடன் வைத்துப் பேசுகிறார். நாம் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல்லும் போது' இறைவனிடம் இவற்றையெல்லாம் விண்ணப்பிக்க வேண்டும் என்று பல எண்ணங்களுடன் செல்வோம். சில பல நேரங்களில் அவற்றை நாம் மறந்து விடலாம் நாம் எதற்காகச் சென்றோமோ அதை விண்ணப்பிக்காமல் வந்து விடுவோம். வீட்டிற்கு வரும்போது 'மறந்து விட்டோமே' என்ற ஏக்கம் ஏற்படலாம். ஆனால் எல்லாம் உணர்ந்த கடவுளுக்கு அது தெரியாதா? நாம் கேட்காமலே தரக்கூடியவர் அவர். நம் ஆசை முற்றுப் பெற்றதை நினைத்து பல நேரங்களில் மகிழ்ந்து இருக்கிறோம். அதனால்தான் குறள் ஐயப்படாஅ தகத்த துணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்' (702) என்கிறது.

**அகத்தது உணர்வானை- நம் மனத்தில் இருப்பதை உணர்வானை-** என்ன அருமையான சொற்றொடர்! அகத்தது உணர்தல் தானே குறிப்பறிதல்! கண்ணனைக் கண்டு தன் வறுமை நிலையைக் கூறி பொருள் பெற்று வரத்தானே போகிறார் குசேலர்? என்ன நடந்தது? எல்லாம் மறந்தது. அவல் பரிமாற்றம் நேர்ந்தது. எதற்காகச் சென்றாரோ அது நடைபெறவில்லை. என்று வருத்தமுடன் வீடு செல்கிறார் குசேலர்! என்ன ஆயிற்று! எல்லாம் செல்வ மயம்! ஆனந்த மயம்! இதைத்தான் மிக நுணுக்கமாக குறள் கூறுகிறது! அகத்தது உணர்வானை! இது சாத்தியமா? இதற்குதான் முத்தாய்ப்பாக வருகிறது முதற் குறள்!

**கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக் கணி (701)**

கூறாது ஒருவன் குறிப்பை உணர்கின்றவன் உலகத்திற்கு ஆபரணம் போன்றவன்.
எப்படிபட்ட உலகம்? வற்றாத நீரால் நிறைந்த உலகம்
நீர் -அன்பு, அருள், பாசம், வாழ்வு.

உலகிற்கு முதல் தேவை நீர்தான். நீரால் உலகம் சூழவில்லையென்றால் அங்கு வறுமைதான் நிலவும். அதைபோல அன்பற்றவன் வாழ்க்கை எப்படிபட்ட செல்வம் கொண்டதாக இருந்தாலும் அது வற்றல் மரம் துளிர் விட்டதைப் போல் ஆகும். யாரிடத்தில் பாசம், பற்று, அன்பு இருக்கிறதோ அவன் மற்றவரின் குறிப்பை அவர் கூறாமலே உணர்ந்துக் கொள்ள முடியும்! மேலும் அவனுக்கு மற்றவரின் உள்ளக் குறிப்பை அறிந்துக் கொள்வதில் எந்தவித ஐயமும் ஏற்படாது! குறள் பாசத்தை, அன்பை 'பசை' என்ற சொல்லால் குறிக்கிறது.
'பசையினள் பைய நகும்' (குறிப்பறிதல்- காமத்துப்பால்)
அப்படிபட்ட தன்மை உடையவனை நம்முடைய 'உடைமையாகக் கொள்ளுதல் வேண்டும் என்கிறது குறள்:

**குறிப்பிற் குறிப்பு ணர்வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல் (703)**

**உறுப்பினுள் நம் உறுப்புகள். அவ்வாறு சொல்லும்போது அது ஐந்து பொறிகள் மட்டுமல்ல, உயிரையும் சேர்த்துதான் சொல்லப் பெற்றுள்ளது. சிலர் உடைமை என்றும் கொள்வார். (திருக்குறள், வீ. முனிசாமி, பக். 119- 120)** உடைமைகள் என்று சொல்லப் போகும் போது அவை காலத்தால் அழிந்து படலாம். ஆகையால் உடைமைகள் என்று கொள்வது காட்டிலும் உறுப்பினும் யாது கொடுத்தும் கொளல் என்பதை நம் உறுப்பு ஏதேனும் ஒன்று கொடுத்து என்று கொள்ளாமல் அவை நம் உறுப்பாகவே கொள்ளுதல் வேண்டும். நம்முடைய உடைமையாகக் கருத வேண்டும். அவன் நமுடைய மூளை, இதயம், கண், செவி, வாய் என் ஏதேனும் ஒரு உறுப்பாகக் கொள்ளுதல் சிறந்தது. ஆங்கிலத்தில் "he is my right hand' என்று கூறுவதைப் பார்க்கிறோம். அப்படிபட்டவனை எப்படி அடையாளம் காண்பது? அவன் நமக்காக எதையும் செய்யத் தயங்க மாட்டான் என்கிறது குறள்.

**பெயக்கண்டு நஞ்சு ண்டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர். (580)**

நயத்தக்க நாகரிகம் என்பது செய்ய வேண்டிய செயலை செய்ய வேண்டிய தருணத்தில், வேண்டிய வண்ணம் சிறப்பாகச் செய்து அமைதல் என்பதாம்' அதை செய்ய வேண்டுமென்றால், மற்றவருடைய துணை வேண்டும். அவருடைய எண்ணவோட்டம் அறிய வேண்டும். நம்மால் புரிந்து கொள்ள முடியாதபோது அத்தன்மையில் சிறப்புடைய ஒருவரை எதைக் கொடுத்தாவது பெற்றுக் கொள்ள வேண்டும். அவரையே நம்மவராக ஏற்றுக் கொள்ளூம் போது வாழ்க்கை வரப்பிரசாதமாக ஆகிவிடும் என்பதுதான் இதன் பொருள். நம்முடையவராக ஏற்றுக் கொள்ளும்பொது அதனால் நமக்கு நன்மைகள்தான் அதிகம். நல்ல

நண்பன் என்றால், நம்முடைய தவறை சுட்டிக் காட்டுபவன் ஆவான். 'நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு (அதி-நட்பு-79-குறள்- 784)

இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். நல்லவரின் தொடர்பு எப்படிப்பட்டது? உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்' (அதி-கல்வி-40 குறள்-394). நல்லவரின் நட்பு மிக்க மகிழ்ச்சியைத் தரும். அதுமட்டுமல்லாமல், பிரிந்து செல்லும் போது 'மீண்டும் இவரை எப்போது சந்திப்போம்' என்ற உணர்வைத் தரும். அவர்தான் உண்மையானவர், நம் வாழ்க்கையை செம்மைப்படுத்துபவர். நம்முடையவர் என்று கொள்வதன் மூலம் ஒரு ஆக்கம் என்னவாக இருக்கலாம் என்று ஆராய்கையில் உண்மையானவனின் முகம் இப்படித்தான் இருக்கும் என்று அடையாளம் காட்டுகிறது குறள்: (28) நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் என்று அவரது செயல்களே அவரது தன்மையை உணர்த்திவிடும் என்றாகிறது. இது ஒரு நண்பன் செய்யலாம். ஆனால் மன்னனைச் சார்ந்து வாழும், அல்லது மன்னனுக்கு நீதி, தர்மம் போன்ற பலவற்றை உரைக்கும் அமைச்சன் எப்படி செயல்பட வேண்டும்?

'குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் செயல்.' (அதி-மன்னரைச் சேர்ந்தொழுகல் 06, குறள் -696) அதாவது மன்னனைச் சார்ந்தோர் குறிப்பறிந்து காலத்தை எண்ணி, வெறுப்பு இல்லாமல் அவர் விரும்புவதை விரும்புமாறு சொல்லுதல் வேண்டும்.
இக்குறளைக் கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

- மன்னன் கேட்பது அல்லது கூறுவது தவறாக இருக்கலாம். ஆனால் அவற்றுக்கு உடனே மாற்றுக் கருத்து கூறுவது காட்டிலும், அவன் தன்மை, மனநிலை, காலம் போன்றவற்றை கணித்து, அவன் மனம் கொள்ளுமாறு வெறுப்பில்லாமல் பொறுமையாகச் சொல்ல வேண்டும்.
- வேண்டுப வேட்பச் சொலல் என்பதை அவன் மனதிற்கு பிடித்தவாறு கூறுதல் என்று கொள்வது காட்டிலும், பின் வருமாறு பொருள் கொள்ளலாம்:
    1. அவன் மனம் கொள்ளுமாறு, அவன் அறிவு உணருமாறு கூற வேண்டும்.
    2. **வேண்டுப-** காலத்திற்கு தக்கது எது ; சமுதாயத்திற்கு தக்கது எது ; மன்னனுக்கு புகழைச் சேர்ப்பது எது என்பதை உணர்ந்துக் கூற வேண்டும்.

எது வேண்டும், எது தேவையற்றது என்பது மன்னனைக் காட்டிலும் அமைச்சன் முதலில் தெளிந்து, பின் கூற வேண்டும். **சில நேரங்களில் மன்னன் கூறுவது, கேட்பது தவறாகக் கூட இருக்கலாம். அப்படிப்பட்ட நேரங்களில் உண்மையான நிலையான கருத்தை அவன் அறியுமாறு உணர்த்துதல் வேண்டும். வேட்ப-** அவன் மனம் நிறையுமாறு, வெறுப்பில்லாமல் கூற வேண்டும்; பல முறை கூற வேண்டும். அதுதான் வெறுப்பில என்பது. இதற்கு பல உதரணங்களைக் கூறலாம். பாண்டியன் அறிவுடைநம்பிக்கு பிசிராந்தையார் அவன் செயல் பற்றி மிக அழகாக அறிவுரை கூறுவது இக்குறட்பாவிற்கு சிறந்த எடுத்துக்காட்டு:

**காய் நெல் அறுத்து கவளம் கொளினே**
**மா நிறைவில்லதும் பன்னாட்காகும்...**
**அறிவுடை வேந்தன்**
**நெறியறிந்து கொளினே கோடியாத்து நாடு பெரிது நந்தும்... (புறநானூறு, 184).**

அதனால்தான், கோப்பெருஞ்சோழன் தன் வாழ்நாளில் பிசிராந்தையாரை ஒரு முறைக்கூட பார்க்கவில்லையென்றாலும், தாம் வடக்கிருக்கும் போது அவரை பார்க்க விரும்புவதாகக் கூறினான். பிசிராந்தையாரைப் பற்றி சோழன் குறிப்பிடும் போது:

**'இகழ்விலன், இனியன், யாத்த நண்பினன்,**
**புகழ் கெட வரூஉம் பொய் வேண்டலனே…**
**சிறந்த காதற் கிழமையும் உடையவன்' (புறநானூறு -216)**

என்று பாராட்டுகிறான். இதல்லவா உண்மையான நட்பு, பேராண்மை! அதனால் தான் வள்ளுவர் இப்படிபட்டவரை எப்பாடு பட்டாவது தன்னுடன் துணையாக, நல்லுறவாகக் கொள்ள வேண்டும்- **யாது கொடுத்தும் கொளல்** என்கிறார்.

புற வாழ்க்கைக்கு மற்றவரின் முகக்குறிப்பு உணர்தல் முக்கியம்; அதைபோலவே நாணயத்திற்கு இரு பக்கமாக விளங்கும் அக வாழ்க்கைக்கும் குறிப்பு உணர்தல் முக்கியம் அல்லவா? அதனால்தானோ வள்ளுவர் இன்னொரு குறிப்பறிதல்' தேவை என்பதை உணர்ந்து, அது அக வாழ்க்கைக்கு என்று நினைத்து அதற்கென ஒரு அதிகாரமும் வகுத்து விடுகின்றார். அது முழுக்க முழுக்க தலைவன் தன் காதலியின் முகப் பாவங்களை, அவளது அங்க அசைவுகளைக் கொண்டு அவள் மனதை ஆராய முற்படுகின்றான்.

**பகுதி -1 அவள் தன்மை**

அவள் கண் அழகு, களவுப் பார்வை கொண்டது, நெடிய பேசும்; நாணம் பிறக்கும். மென்மையான சிரிப்பு இருக்கும், கோபப்பார்வை இருக்கும்,

**பகுதி 2- எது முக்கியம் ?**

மேலே கூறியவை சரிதான்; ஆனால் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்னவென்றால் இவை அத்தனையும் ஒருவன் ஒருத்தியை காதலிக்கும் வரைதான். அதற்குப் பிறகு இரண்டு பேரும் சேர்ந்து வாழும் வாழ்க்கை என்று வந்து விட்ட பிறகு இரு மனங்களும் இணைந்து ஒன்றாயினவா? வள்ளுவரே விடையும் தருகிறார்.

**காதலிக்கும் போது அவளின் ஒவ்வொரு அசைவுக்கும் பொருள் கொண்டவன் திருமணம் ஆன பிறகு அவளுடைய மனக் குறிப்பினை உணருதல் இல்லை. அவளைப் புறக்கணித்தல் என்பதுதான் மிக அதிகமாக நடைபெறுகிறது. அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால்; தம்மை புலந்தாரை புல்லா விடில் (அத்.131, புலவி- குறள் -1303)**

தன்னுடன் தலைவி கோபத்தில் இருக்கிறாள் என்று உணர்ந்தும் அவன் அவளுடைய கோபத்தை தணிக்காது போகின்றான் என்றால் அவளின் மன வருத்தம் கண்டும், குறிப்பு

கண்டும் மனம் கொள்ளாது போகின்றான் எனில் அங்கே வாழக்கையின் தரம் கெடுகிறதல்லவா? அதனால்தான் வள்ளுவர் இரு பாலாருக்கும் சற்று எச்சரிக்கை விடுக்கின்றார். ஊடியவரை உணராமை வாடிய வள்ளி முதல் அரிந்தற்று (புலவி 131, குறள் 1304) என்னும் போது இல்லத்தின் இனிமை கெடும் என்கிறார். ஆனால் இதை காட்டிலும் வள்ளுவர் அதிக எச்சரிக்கை விடுப்பது என்பது பெண்ணுக்காகத்தான் என்று தோன்றுகிறது. உப்பு அமைந்தற்றால் புலவி அது சிறிது மிக்கற்றால் நீள விடல் (அதி-புலவி 131, குறள் - 1302) அப்படியென்றால் கணவன் சற்று திசை விலகிப் போனாலும், கோபம் என்பது ஓரளவிற்குதான். ஊடல் சற்று நீட்டித்தால் அது அவளுக்கு துன்பத்தைத்தான் கொடுக்கும் என்கிறார். அப்படியென்றால் அவளுக்கு வேறு வழி என்ன?

**நோதல் எவன் மற்று? நொந்தா ரென்றஃதறியும்**
**காதலர் இல்லா வழி (அதி- புலவி 131- குறள் -1308)**

அடங்கிப் போவதுதான் ஒரே வழி என்பதுதான் வள்ளுவரின் வாதமாக இருக்கிறது. காரணம் நீரும் நிழலது இனிதே! புலவியும் வீழுநர் கண்ணே இனிது (அதி-புலவி- 131-குறள்-1309) என்று முத்தாய்ப்பாகக் கூறி விடுகிறார். யாரிடம் நாம் பிணங்குகிறோம் என்பது பொறுத்துதான் ஊடல் என்பதும் இனிமையாக இருக்கும். சில நேரங்களீல் அது அவளுக்கு நினைத்ததை அடைய முடியாமற் போய் விடும் என்கிறார். குறுந்தொகையில் உறையூர் சல்லியன் குமரனார் தலைவியின் நிலையைக் குறித்து பாடும் போது' நீ எனக்கு இன்னாதன் செய்யினும் நின்னி ன்றிஅமைதல் வல்லா மாறே' என்று கூறுவதாக அமைத்திருக்கிறார். நம் செயல்களில் சில நேரங்களில் தவறு எற்படலாம். நல்ல குறிப்புடையவன் நம்முடன் பயணிப்பான். நம்மை நல்வழியில் செலுத்துவான். நாம் துன்புறும்போது அவனும் துன்பம் அடைவான் என்கிறது. ஆகையால் அப்படிபட்டவனை நம்முடைய உயிராகக் கொள்ளுதல்தான் முதற்கடமையாகிறது. பிணக்கம் சரிதான். ஆனால் நாம் யாரிடத்தில் பிணங்குகிறோம் என்பது பொறுத்து அது காதலாக முடியும் என்கிறார்.

**முடிவுரை**

குறிப்பறிதல் என்ற தன்மையைப் பார்க்கும்போது, மற்றவரின் மன உணர்வினை அறிந்துக் கொள்வது புற வாழ்க்கைக்கு முக்கியம்; அவசியமும் கூட. ஆனால் அக வாழ்க்கை என்று அமையும் போது, விட்டுக் கொடுத்தல் அல்லது பொறுத்துக் கொள்ளுதல் என்பது அவசியமாகிறது என்று கொள்ளலாம். குறிப்பறிதல் என்பது கணவன் மனைவியுமாக வாழும் போது பல நேரங்களில் அவன் வழியிலேயே மனைவியும் பயணப்பட நேரிடுவதால், குறிப்பறிதல் என்பது அக வாழ்க்கையில் அத்துணை முக்கியம் பெறவில்லை என்று உணரலாம்.

**பயன்பட்ட நூல்கள்**

[1] மதுரை இளங்குமரனார். *திருக்குறள்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-1999.

மலர் - 2, இதழ் - 2, வைகாசி 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

[2] வீ முனுசாமி (திருக்குறளார்). *திருக்குறள்-அதிகார விளக்கம்.* வானதி பதிப்பகம், சென்னை-2008.

[3] *சீனிவாசன், தி. சந்திரிகா ராஜமோகன். நாலடியார்.* சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, 1991.

[4] சொக்கலிங்கம்,சு. ந. *மூதுரை. அவ்வையார் பாடல்கள்.* வானதி பதிப்பகம், சென்னை, 1994.

[5] துரைச்சாமிப் பிள்ளை, சு (ஔவை). *புறநானூறு.* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1976.

[6] இராமசுப்பிரமணியம். *புறநானூறு.* திருமகள் நிலையம், சென்னை, 2000.

[7] *சீவக சிந்தாமணி.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1992.

[8] விநாயகமூர்த்தி, ஆ. *திருக்குறள் காட்டும் மெய்ப்பாட்டுச் சிந்தனைகள் - வான்புகழ்.* சுப்ரமண்ய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பலகலைக் கழகம், புதுச்சேரி: வானவில் பண்பாட்டு மையம், சென்னை, 2011.

[9] கரோலின் ஜெபசாந்தினி. *குறள் கூறும் நட்புச் சிந்தனைகள்.* தமிழில் அற இலக்கியங்கள், கல்லூரி ஆசிரியர் குமரித் தமிழ்ச் சங்கம், நாகர்கோவில், 2011.

[10] கமலா முருகன். *குறள் காட்டும் குறிப்பறியும் கலை.* (பக்.2-2) மேலது.

[11] இளங்குமரனார், புலவர். *கலித்தொகை.* வர்த்தமான் பதிப்பகம், சென்னை -1999.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.